உனது கருணை
ராகம் சிவரஞ்ஜனி         தாளம் ரூபகம்
Composer: Thangam Parameswaran

பல்லவி

உனது கருணை இன்றி
உலகம் உய்யும் வழி உண்டோ
கனக சபையில் ஆடும் அரனின்
ஆரமுதே அம்பிகையே

அனுபல்லவி

எனது மனந்தனில் அமர்ந்து
அறிவுரைகள் பல மொழிந்து
காக்கும் தெய்வம் நீயன்றோ
சம்புமனோஹரி சங்கரி
சிவகாம ஸுந்தரி

சரணம்

பாலனுக்கன்றொரு நாள்
பாலமுதம் தந்த அன்னையே
ஞானமார்க பந்துவாய்
துணையாய் நின்றனையே

கோப தாபங்களை அடக்கும்
அன்பு பண்பு அவை வளர்க்கும்
இதயநிலை தாராயோ
கற்பகவல்லி காமாக்ஷி
மரகதவல்லி மீனாக்ஷி

©Copyright 2001-2022 Thangam Parameswaran, Orleans Ontario Canada